5. உரிமைப் பிரச்சினை "மக்கள் குரல்" பத்திரிகையில் தவருன செய்தி வந்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரா. உமாநாத் அவர்கள் "மக்கள் குரல்" நாளிதழ் மீது ஒரு உரிமை மீறல் பிரச்னை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அதை எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, 44-வது அரசியல் திருத்தச் சட்ட விவாதத்தின்போது. நான் கடைசியில் பேசுகிறபோது அரசியல் குற்றங்களுக்காக திருமதி இந்திரா காந்தி அவர்களை நீதிமன்றத்தில் வைத்து விசாரிக்க வேண்டுமென்று சொன்னேன். நான் பேசி முடித்த உடனே மாண்புமிகு நண்பர் மாரிமுத்து அவர்கள்எழுந்து சமீபத்தில்நடந்து இருக்கும்தேர்தல்' அவர்கள் 'மக்கள் தலைவி' என்று நிரூபிக்கப்பட்டு விட்டது, ஆகவே, அதற்காக மறுபடி ட்ரையல் தேவை இல்லை என்று கூறினர். உடனே நான் எழுந்து, இந்திய நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் அளித்த தீர்ப்பு "அவர்கள் தலைவி அல்ல" என்று சொல்லி, அதைக் கான்டிரடிக்ட் பண்ணி, அந்த மக்கள் தீர்ப்பு பிரச்சினை வேறு, செய்த குற்றத்திற்கான தீர்ப்பு வேறு என்ற முறையில் பதில் சொன்னேன்.

எல்லாப் பத்திரிகைகளும் அந்த பதில், கான்டிரடிக்ஷன், இரண்டையும் சேர்த்து பப்ளிஷ் செய்து இருக்கின்றன. ஆனல், இந்த ஒரு பத்திரிக்கை மட்டும், "இந்திய நாட்டிலுள்ள பெருவாரியான மக்களின் தலைவி அல்ல" என்ற போர்ஷனை கட் பண்ணி தேர்தல் தீர்ப்பு வேறு. இது வேறு என்று என்னுடைய பதிலாகக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அருமை நண்பர் திரு.மாரிமுத்து அஸர்ட் பண்ணியதற்குப் பிறகு "தேர்தல் தீர்ப்பு வேறு" என்று படித்தால், நான் தேர்தல் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிற மாதிரியாகும். நான் கான்டிரடிக்ட் செய்ததையும் பப்ளிஷ் செய்து இருக்க வேண்டும். அவர்கள் இப்படி பப்ளிஷ் செய்து இருப்பது நான் பேசியிருப்பதை "மியுடிலேட்" பண்ணியதாகும். இது என்னுடைய கட்சியின் அரசியல் நிலைக்குத் தவருக இருக்கிறது. அந்த நிருபர் தப்பாகச் சொல்லி இருக்க முடியாது. உங்களுடைய ரிகார்டுகளிலும் கரெக்ட்டாக இருக்கிறது. அந்தத் தவறை அந்த மானேஜ்மென்டார் செய்து இருப்பார்கள். அவர்கள் இந்திரா காந்தி தலைவி என்று கருத்துக் வைத்துக் கொள்வதில் தவறு இல்லை. ஆனல், Let them not put their ideas into my mouth அது தான் நான் சொல்ல விரும்புவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னை பத்திரிக்கை மீது இருப்பதால், அவர்களுக்கு எழுதிக் கேட்டு பதில் வந்த பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன்.